14-08-2024.
Ele.O.No.36/2022

ம. சா. 2 ஜீவாநந்தம்  அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை :- (தொடர்ச்சி)

நான் பழனி ஆயக்குடி விடுதலை சிறுத்தைகள் கட்சியில் பழனி ஒன்றிய செயலாளராக இருக்கிறேன் என்றால் சரிதான். சரசுவதிக்கு முன்மொழிந்த வேலுச்சாமி என்பவர் விடுதலை சிறுத்தைகள் கட்சியில் ஒன்றிய துணை செயலாளராக இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. அவர் எந்த பொறுப்பிலும் இல்லை. ஏற்கனவே இந்த மனுவில் சொல்லி உள்ள கருத்துக்களை சொல்லி ஆயக்குடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மகேந்திரன் என்பவருக்கு 02.03.2022 ம் தேதி புகார் மனு கொடுத்து அவரும் பதில் அனுப்பி உள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படுவது மேற்படி பேரூராட்சி செயல் அலுவலர் அனுப்பிய பதில் என்றால் சரிதான். அது எமசாஆ.1. அதில் வாக்காளர் பட்டியலில் வரிசை எண்.49 ல் இருப்பதாக சொல்லி உள்ளார். எமசாஆ.1 பதிலில் சரஸ்வதிக்கு முன்மொழிந்த வேலுச்சாமி உயிருடன் இருக்கிறார், அவருடைய வாக்காளர் நம்பரும் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் விசாரணை செய்யாமல் அவ்வாறு சொல்லி உள்ளார். வேலுச்சாமியும் நானும் ஒரே ஊரில் ஒரே தெருவில் வசிக்கிறோம் என்றால் சரியல்ல. அப்படி என்றால் என் தெருவில் வசித்து வரும் நபர் பெயர் என்ன என்றால் அவர் பெயர் சக்திவேல். அவர் பெயர் சக்திவேல்தான் என்பதை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். ஒரே பள்ளியில் நானும் வேலுச்சாமியும் படித்தோம். சக்திவேல் என்னுடன் படிக்கக் கிடையாது. என்னுடன் படித்த வேலுச்சாமி இந்திய ராணுவத்தில் பணியாற்றியவர். அவர் இறந்துவிட்டார். நான் எழுப்பிய அனைத்து  புகார்களுக்கு ஆதாரம் இல்லை என்றும், சக்திவேல் என்று புணைப்பெயராக சொல்லிக்கொண்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சக்திவேல் என்ற மகனே கிடையாது என்றாலும் அவருக்கு வேலுச்சாமி என்ற பெயரில் இரண்டு மகன்கள் இருந்தார்கள் என்றாலும், இரண்டு பேருக்கும் தனித்தனி ஆதார் கார்டு, ரேசன் கார்டு உள்ளது என்றாலும் சரியல்ல. உயிருடன் இருக்கும் வேலுச்சாமிதான் சரஸ்வதிக்கு முன்மொழிந்த வேலுச்சாமி என்றால் சரியல்ல. வேலுச்சாமியின் தாயார் பெயர் முத்தம்மாள். அவர் இறந்துவிட்டார். அவரது வாரிசு சான்றிதழ் கேட்டு

விண்ணப்பித்தபோது வாரிசு சான்றிதழ் கொடுத்து அதில் இறந்துபோன முத்தம்மாளுக்கு இரண்டு வேலுச்சாமி மகன்கள் உள்ளார்கள் என்று சான்று வழங்கப்பட்டுள்ளது என்றால் விசாரிக்காமல் கொடுத்துள்ளார்கள். அந்த சான்றிதழை ரத்து செய்யச்சொல்லி நான் நடவடிக்கை எடுத்துள்ளேன். இந்த வழக்கில் எழுப்பட்டுள்ள அத்தனை குற்றச்சாட்டுக்கள் தவறான குற்றச்சாட்டுக்கள் என்றும் எனக்கு எந்த பரிகாரங்களும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை :- இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.08.14 17:42:42 +0530

Principal District Judge,
Dindigul.